மாண்புமிகு திரு செ. மாதவன் : இதுபற்றி மத்திய தொழிலமைச்சரை கேட்க வேண்டும்.

Additional Courts for West Ramanathapuram.

* 111 *Q.*—THIRU K. SUPPU : Will the Hon. Minister for Ind ustries be pleased to state :—

(*a*) whether the Government have received the resolution passed unanimously by the West Ramanathapuram District Deveolpment Council demanding the location of a Sub-Court at Srivilliputhur and a Sub-Magistrate's Court at Rajapalayam ; and

(*b*) the steps taken on the resolution?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஸ்ரீவில்லிப்புத்தூரில் துணை நீதிமன்றம் ஒன்றையும், ராஜபாளையத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் ஒன்றையும் அமைப்பது குறித்த செயற்குறிப்பு, இம் மாநிலத்தில் உள்ள உரிமை வழக்கு நீதி மன்றங்கள், குற்ற வழக்கு நீதி மன்றங்கள் ஆகியவற்றின் ஆட்சி வரம்பைப் பரிசீலனை செய்வதற்காக அமைக்கப்பட்டு சென்னையில் செயல் படும் குழுவின் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேற்சொன்ன குழுவின் அறிக்கை இன்னும் வரவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தக் குழு பல மாவட்டங்களுக்கும் சென்று விவரங்களைச் சேகரிப்பது முடிந்து விட்டதா? இன்னும் எத்தனை நாட்களுக்குள் அறிக்கையை வெளியிட வேண்டுமென்று வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா ? விரைவில் அறிக்கை வெளியிடப்படுமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : எல்லா பரிசீலனையும் முடிந்து விட்டது என்று தெரிவித்திருக்கிறார்கள். இறுதியாகப் பரிசீலித்து எல்லா நீதிமன்றங்களைப் பற்றியும் ஓர் அறிக்கை தருவதாகக் கூறி இருக்கிறார்கள். மிக விரைவில் தர வேண்டுமென்று அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

கும்முடிப்பூண்டி இராஜனேரி நீர்த் தேக்கம்.

*112 வினா : திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், தேர்வாய் அருகில் அமையும் இராஜனேரி நீர்த் தேக்கத் திட்டத்தின் பணி எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பொதுப்பணித்துறை அதிகாரிகள் இத் திட்டத்தை ஆய்விற்காக எடுத்துக் கொண்டுள்ளனர்.

1972 டிசம்பர் 9]

திரு. கா. வேழவேந்தன் : இந்த இராஜனேரி நீர்த்தேக்கத் திட்டத்தின் மூலம் பல்வேறு கிராமங்களில் ஏராளமான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும். இப்போது பெய்த மழைத் தண்ணீர் கூட வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. இதை விரைவுபடுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோட்டப் பொறியாளர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கான முன் ஆய்வுக்கான புள்ளி விவரங்களைக் கேட்டுள்ளார். மற்றும் புலனாய்வுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கோட்டப் பொறியாளர் இந்தத் திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டுமென்று தலைமைப் பொறியாளரால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். இந்த அடிப்படையில் திட்டம் விரைவுபடுத்தப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: பொதுவாக செங்கற்பட்டு மாவட்டத்தில் எந்தத் திட்டத்தை மேற்கொண்டாலும் சென்னை மாநகராட்சியின் ஒப்புதல் தேவை என்று சொல்லுகிறார்கள். இதனால் எங்களுக்கு இருக்கிற ரைப்பேரியன் ரைட்ஸ் பாதிக்கப்படுகிறது. இதைப் போக்க கூடுதலான தண்ணீரை (சர்ப்ளஸ் வாட்டரை) பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற உத்தரவை சென்னை மாநகராட்சிக்கு அளிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னை குடிநீர்த் திட்டத்திற்குப் பாதகம் ஏற்படாமல் செங்கற்பட்டு மாவட்டத்திலே சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. சென்னை மாநகராட்சியின் அனுமதியைக் கேட்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல் இருக்கின்ற ரைப்பேரியன் ரைட்ஸ் பாதிக்கப்படாமல் இருக்க நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : ஆய்வில் இருக்கும் ராஜனேரி நீர்த்தேக்கத் திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்று அதிகாரிகள் வரையறுத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தப் புள்ளி விவரம் தற்போது இல்லை.

சாலைக்கிராமம் கால்வாய் புனரமைப்பு.

*113 வினா : திரு வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வைகை நதியிலிருந்து பிரிந்து செல்லும் சாலைக்கிராமம் கால்வாயைப் பழுதுபார்க்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு அனுமதி பெற வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?